ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/27 - 2016 ඔක්තෝබර් මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.10.27

*1990/27 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து செய்யும் நியதிச் சட்டத்தின் 24(2)(1) (xii), (xiii) மற்றும் 24(3) அத்துடன் மத்திய மாகாணத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் 20 ஆவது பந்தியின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை*

*1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து செய்யும் நியதிச் சட்டத்தின் 24(2)(1) (xii), (xiii) மற்றும் மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் 20 ஆவது பந்தியின் கீழ் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய எனக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழே குறிப்பிட்டுள்ள பிறப்பிக்கப்பட்ட கட்டளையை இடுவதோடு இவ்வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அமுல் நடத்தப்பட வேண்டும் என்பதை இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

மத்திய மாகாணத்திற்குள் போக்குவரத்து செய்யும் பஸ்களுக்கிடையில் இருக்கும் தகாத போட்டியும் போக்குவரத்து செய்யும் மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்காக புதிய போக்குவரத்து வழிமுறையை அறிமுகப்படுத்துவதற்காக 2016, யூலை 20 ஆந் திகதி முதல் 2016, ஒற்றோபர் 19 ஆந் திகதி வரையும் போக்குவரத்து இரண்டு வழிகளுக்கு “ஸகஸர” எனும் பெயரின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் போக்குவரத்துச் சேவை வழங்கும் முகாமைத்துவ திணைக்களத்தினால் 2016, ஒற்றோபர் 25 ஆந் திகதி, வெளியிடப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பஸ்கள் பிரிவின் திருத்தியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் இடைக்கால அறிக்கையின் கீழ் விதந்துரைக்கப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் கொண்ட போக்குவரத்து செய்யும் சகல பாதைகளிலும் குறிப்பிடப்பட்ட “ஸகஸர” எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எதிரிவீர வீரவர்தன,<br>
மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து,<br>
மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு<br>
நிர்மாணத்துறை அமைச்சர்.

வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு<br>
நிர்மாணத்துறை அமைச்சர் அலுவலகம்,<br>
மத்திய மாகாண சபை,<br>
கண்டி,<br>
2016, ஒற்றோபர் 27.

11- 612

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.